TAMIL

# Residues & Remixes

## sam contemporaries


### *SAM* சமகாலப் படைப்புகள்: மீந்தவையும் மீள்கலவைகளும்

ஈராண்டுக்கு ஒருமுறை, சிங்கப்பூர் ஓவியங்களைப் படைப்பதில் உருவாகிவரும் போக்குகளிலும் நடைமுறைகளிலும் கவனம் செலுத்தும் சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தின் (SAM) திட்டம், SAM சமகாலப் படைப்புகள். கூட்டாய்வின் பயனாக உந்தப்படும் இந்தத் திட்டம், பரிசோதனை முயற்சிகளுக்குரிய ஒரு மேடை. ஓவியர்களுக்கும் அருங்காட்சியக் காப்பாளர்களுக்கும் இடையே நடக்கும் தொடர்ந்த உரையாடல், நெருங்கிய ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் இது உருவாக்கப்படுகிறது.

மீந்தவையும் மீள்கலவைகளும் என்னும் தலைப்பில் தொடங்கும் இந்தக் காட்சி, இன்றைய உலக வரலாற்று எச்சங்களின் தாக்கம், நாம் உலகை எப்படிக் காண்கிறோம், அனுபவத்தால் அறிகிறோம், புரிந்து கொள்கிறோம் என்பனவற்றில், புதிய தொழில்நுட்பங்களின் செல்வாக்கைப் பரிசீலிக்கிறது. இந்த வட்டாரத்தின் வரலாறு, நிலப்பரப்பு, நினைவுகள், பொருளாதாரம் ஆகியவற்றைப் புலம் பெயர்தலும், பண்பாட்டுப் பரவலும் வரையறுத்திருக்கின்றன. காலம்,இடம், இவற்றின் எச்சங்களோடு தொடர்புப்படுத்த, மறைக்கப்பட்ட வரலாறுகளை அகழ்ந்தெடுக்க, மறந்த கதைகளை நினைவூட்ட, காலனிய ஒழிப்பு, காலனியத்திற்குப் பிந்திய பார்வைகள், இவற்றில் நிலைகொண்ட புதிய செயல் முறைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றை, இந்தக் கண்காட்சியில் ஓவியர்கள் பின்பற்றியிருக்கிறார்கள். சமகால வாழ்வனுபவங்களில் மின்னிலக்க தொழில்நுட்பம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின்மீது ஒரு கண் வைத்துக்கொண்டு, கடந்த காலமும் நிகழ்காலமும் ஊடறுத்துச் சந்திப்பதை, ஓவியர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

மீந்தவையும் மீள்கலவைகளும் கண்காட்சி வழங்கும் கலைப்படைப்புகள், அன்றாட அனுபவங்கள் முதல், அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் வரை, மறைந்த காலத்தின் மறைந்த நினைவுகளை, இந்தக் கலைஞர்கள், மீள்கற்பனை, மீள் கலவை செய்யும் வழிகளை, முதன்மைப்படுத்துகின்றன.

யேயூன் ஏவிஸ் ஆன், என்டனி சின், பிரியகீதா தியா, ஃபயரூல் தர்மா, கைரூல்தீன் வகாப், மோஸஸ் டான் ஆகிய கலைஞர்களையும், ஜோலாக்யூ, ஆங் புவே கிம், ஷபீர் ஹுஸைன் முஸ்தபா, ஸ்யாஹீதா இஸ்கந்தர், கென்னத் டே, தெங் யென் ஹுய் ஆகிய அருங்காட்சியகக் காப்பாளர்களையும் மீந்தவையும் மீள்கலவைகளும் என்னும் இந்தக் கண்காட்சி காட்சிப்படுத்துகிறது.




**யேயூன் ஏவிஸ் ஆன்**
***அன்றாட மோதலை விரைவுபடுத்தும் கருவி (அ.மோ.வி)***
**2023**
கோப்பைகள், சூளை அடுப்புக் கையுறைகள், மடிக்கணினி, எண்ணெய்ச் சட்டி, பல்துலக்கும் பிரஷ், நாற்காலிகள், தொலைபேசி, பாத்திரங்கள், முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்ட பொருட்கள், மின்விளக்குக் குமிழ், கயிறு, அச்சிடப்பட்ட காகிதம், ஒலி.

சிங்கப்பூர் கலை அருங்காட்சியகப் பொறுப்பாணையின் பேரில் உருவானது.

அன்றாட மோதலை விரைவுபடுத்தும் கருவித் துகள்கள் மோதிக்கொள்ளும், பெரிய, விரைவு கூட்டுக் கருவியைப் போலமைந்த ஒரு நிறுவல். நடு உள்ளொளியிலிருந்து, கோப்பைகள், பல்துலக்கும் பிரஷ்கள், நாற்காலிகள் போன்ற பொருட்கள் வெடிப்பதைப் போன்றமைக்கப்பட்ட சில பொருட்கள், வெடிப்பின் வலிமையைக் காட்ட, அழுத்தவும், இழுக்கவும்பட்டன.இந்த நிறுவலைச் சுற்றிப் பார்வையாளர்கள் நடக்கும்போது, களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒலித்துணுக்குகளைக் கேட்கலாம். அந்த ஒலிகளில் சில, நமக்குப் பழக்கமானவை. ஆனால் என்னவென்று முழுமையாய் இனம் காண இயலாதவை.

பெரிய ஹார்டன் கொலைடர் என்னும் கருவியின் தரவுகளை, ஒலியாக மாற்றும் முயற்சியான குவாண்டைசர் என்பதைப் போன்றது, ஒ.அ.மோ. வி. குவாண்டைசரின் துகள்கள் மோதிக் கொள்ளும் ஒலி வழி மறுவிளக்கம், அறிவியல் தரவுகளை அணுகும் புதிய வழிமுறையை தொடங்கி வைத்தது.

பொருட்களும் சூழலும் நம்முடைய அனுமானங்களின் அடிப்படையில் அமைந்த யதார்த்தங்களை நுட்பமாகச் சீரமைத்துக்கொள்வதன் மூலம், எப்படி பின்னிப் பிணைந்திருக்கின்றன எனப் பரிசீலிப்பதன் மூலமும், அவற்றுடன், புதிய உறவுகள் குறித்து சிந்தனைக்கு வர, ஒ அ மோ வி தூண்டுகிறது.

ஒருவரின் அன்றாட வாழ்வின் நடைமுறைகளும், அவற்றில் இடம்பெறும் பொருட்களும், ஒ அ மோ வி யில் நகைச்சுவையோடு சித்தரிக்கப்படுகின்றன. அவை எப்படிப் பார்க்கப்படலாம், பயன்படுத்தப்படலாம், ஒழுங்குபடுத்தப்படலாம், புரிந்து கொள்ளலாம் என்று, ஒவ்வொரு பொருளின் சாத்தியங்களையும் விரிவுபடுத்துகின்றன. அன்றாட வாழ்வனுபவங்கள் உப்புச் சப்பற்ற, முக்கியத்துவமற்றவை அல்ல., மற்ற பொருட்களோடும், சூழலோடும் நம்மோடும் எதிர்கொள்ளும் சீரற்ற ஆனால் அர்த்தமுள்ள வாய்ப்புக்கள் என்பதை ஒ அ மோ வி காட்டுகிறது.

அக்டோபர் 29, 2023 வரை குயின் ஸ்டிரீட் தெருவில் காணக்கூடிய, சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தின் விளம்பரப் பலகையின் தலைகீழ் மரங்கள் என்ற சித்திரமும் இந்த ஓவியருடையதுதான். ஆன், மரங்களின் நிழல்களை, அந்தத் தெருவின் , எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் மரங்களின் , நிழல்களோடு தொடர்புப்படுத்தி, இந்த வரைகலையில் சித்தரிக்கிறார்.

**ஓவியர் குறித்து**

கலைப் பொருட்களை உருவாக்கும் முறைகளை மறுபரிசீலனை செய்யும் பல்லூடகக் கலைஞர் யேயூன் ஏவிஸ் ஆன், ஓவியங்களுக்கும் அப்பால் அவரின் செயல்பாடுகள் இசை, வடிவமைப்பு, அச்சிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய, ஒரு கலைஞராகத் தமது சொந்த அனுபவங்களிலிருந்தும், மின்னிலக்க கலாசாரத்திலிருந்தும் மன ஊக்கம் பெறுகிறார்

ஆப்ஜெக்ட்விஸில் நடைபெற்ற *கசப்பான உலகிற்கு இனிப்பு மாத்திரைகள்* (2022), சிங்கப்பூர் கலை வாரத்தின் *விற்பனைக்கு அல்ல* (2022), தேசியக் கலைக்கூடத்தின் *பொழுது போகிறது* (2021), சூப்பர் நார்மலின் *கண்ணாடியில் இருக்கும் பொருட்கள்* (2019) போன்ற குழுக் கண்காட்சிகளிலும், தென் கொரியாவின் ஜெஜு தீவில் நடைபெற்ற *நிறுவனங்கள்* (2018) என்னும் தனிக்காட்சியிலும் பங்கேற்றிருக்கிறார். சிங்கப்பூர் எஸ்பிளனேடின் வளைகுடா கலையரங்கில் நடைபெற்ற *லிக்* (2021) என்ற நேரடிக் காணொலிக் காட்சியிலும் நடித்துள்ளார்.

**என்டனி சின்**
***வெள்ளியிலிருந்து உருக்கு***
**2023**
வெள்ளி முலாம் பூசுதல், பித்தளை, உருக்கு
சிங்கப்பூர் கலை அருங்காட்சியக
பொறுப்பாணையின் பேரில் உருவான

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் மலேயாவில் இரும்புத் தாது வெட்டியெடுக்கப்பட்டதையும், அதனால் ஜப்பானிய அரசாட்சியோடு சிக்கல்கள் ஏற்பட்ட வரலாற்றையும் சொல்கிறது, வெள்ளியிலிருந்து உருக்கு. மலேசியத் தீபகற்பத்தில் பரவிக் கிடந்த 11 இரும்புச் சுரங்கங்களிலிருந்து தாதுக்களை எடுத்து, ஜப்பானில் இருந்த, இம்பீரியல் ஸ்டீல் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு, 1921 முதல் மலேயா அனுப்பி வந்தது. ஜப்பான் விரைவாகத் தொழில்மயமாவதையும், நவீனமடைவதையும் உந்திய உருக்கு உற்பத்திக்கு, மிகத் தேவையான மூலப் பொருள் அது. ஆனால் அதே உருக்கு, இரண்டாம் உலகப் போரின்போது, ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுதமாக –ஷின் கந்தோ என்னும் புதிய இராணுவக் கத்தியாக- மலேயாவிற்குத் திரும்ப வந்தது, ஒரு நகைமுரண்.

கலைஞரால் மாற்றம் செய்யப்பட்ட 11 ஷின் கந்தோ மாதிரிகள் இந்தக் காட்சியில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு கத்தியின் கைப்பிடியும், நீரிணைக் குடியிருப்புகளின், நாணய மாதிரி அடுக்குகளால், மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானியர்களுக்குச் சொந்தமான 11 இரும்புச் சுரங்கங்களைக் குறிக்கும் வகையில், கவனமாக உருவாக்கப்பட்ட உருக்குத் தகடு, ஒவ்வொரு கேடயத்திற்கும் மாற்றாக அமைகிறது. இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட இராணுவ வாளின் பிம்பத்தை மாற்றியதன் மூலம், வெள்ளியிலிருந்து உருக்கு மூலப்பொருள் மீதான சுரண்டல்; அதை ஆயுதமாக்கல் என்பவை குறித்துச் சிந்திக்கவும், அதிகம் அறியப்படா வரலாறுகளைப் பற்றி புதிதாகப் பரிசீலிக்கவும் வாய்ப்பளிக்கிறது.

தாஞ்ஜோங் பகார் துறைமுகத்திற்கு எதிரே, பிளாக் 39, மூன்றாம் தளத்தின் தாழ்வாரத்தை ஒட்டிய பகுதியில், கலைஞரின் இந்தப் படைப்பை இப்போதும் காணலாம். படைப்பைக் காண, பிளாக் 37 எதிரேயிருக்கும் கட்டிடத்தின் அருகே, படிக்கட்டின் வழி செல்லவும். நகரும் இயந்திரப் பிரயாண சாதனங்களைப் பயன்படுத்துவோர், முன்னறையில் பணியாளர்களின் உதவியைக் கோரலாம்.

**என்டனி சின்**
***தென் கடல் தாது***
**2023**
மிகை யதார்த்தம், 1 நிமி 36 நொடி
சிங்கப்பூர் கலை அருங்காட்சியக ஆணையின் பேரில் உருவாக்கப்பட்டது

தென் கடல் தாது என்ற மிகைவளர் யதார்த்தத் தொடர், ஒற்றைப் பாறையில் மெல்ல மெல்ல உருவாக்கப்பட்ட ஒரு கரு நிறக் கட்டி, தாஞ்ஜோங் பகார் துறைமுகத்தை, அச்சமூட்டும் வகையில் சுழன்று, உருண்டு கொண்டிருப்பதைச் சித்தரிக்கிறது. நிறைவு பெற்றதும், அந்தக் கட்டி, சிறு பாறைகளாக உடைந்து சுற்றியுள்ள பகுதிகளில் மழையெனப் பொழிகிறது. முடிவில், பார்வையாளரின் திரை கறுப்பாக மாறுகிறது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் மலேயாவின் இரும்பு வளம் ஜப்பானால் சுரண்டப்பட்டதைக் கலைப்படைப்புக் குறிக்கிறது. இந்தச் சுரண்டல், 1921ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நான்யோ கோக்யோ கோஷி என்ற சுரங்க நிறுவனம் தோன்ற வழிகோலிற்று. அதன் பின்னர், மலேயா நெடுகத் தோன்றிய ஜப்பானியர்களுக்குச் சொந்தமான சுரங்க நிறுவனங்களும், உருக்காலைகளும் ஜப்பானின் நவீனமயமாதலையும் இராணுவக் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் முக்கியப் பங்காற்றின.1921க்கும் 1945க்கும் இடையே மொத்தம் 19.72 மில்லியன் டன் இரும்பு, மலேயாவிலிருந்து ஜப்பானுக்கு அனுப்பப்பட்டது. இதில் பிரிட்டிஷ் காலனித்துவ நிர்வாகம், சிங்கப்பூர், மலேயா உட்பட்ட மாநிலங்கள் மறைமுகமாக பங்காற்றின.

தென் கடல் தாது, சிங்கப்பூர் துறைமுகங்கள் வழியே இரும்புத் தாது அனுப்பப்பட்ட வரலாற்றைப் பதிவு செய்கிறது. இரவல் காட்சி (ஷாக்கேய் ) என்ற தொன்மையான ஜப்பானியத் தத்துவத்தை ஏற்று, சின், சுரண்டலின் அளவையும், இட மாறுதலையும் துறைமுகச் செயல்பாடுகளின் பின்னணியில் காட்சிப்படுத்தி அளிக்கிறார்.

மீந்தவையும் மீள்கலவைகளும்  கண்காட்சியின் ஒரு பகுதியாக இந்தக் கலைஞரின் படைப்பு, சிங்கப்பூர்
கலை அருங்காட்சியகத்தின் முதல் காட்சிக் கூடத்தில் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது

**கலைஞரைப் பற்றி**

இடத்தின் வரலாறு,  குறிப்பிட்ட இடத்தின் கட்டடக் கலை ஆகியவற்றைக்  கவித்துவமாகவும் தத்துவார்த்தமாகவும்,  இடத்திற்குப் பொருத்தமாகக், கலைப்படைப்புகளைப் படைப்பவர் என்டனி சின். சிறு தீவு நகரில்,  நாம் இணைந்து வாழ, சவால்விடுக்கும் பிரச்னைகளின்பால் ஈர்க்கப்பட்டவர். விரிவான ஆய்வுகளினால் உருவாகும் அவர் படைப்புகள், சாதாரணப் பொருட்களைக் கொண்டு, காலனிய, காலனியத்தின் பிற்காலத்திய அதிகாரத்தினால், அங்கீகரிக்கப்படாத அமைப்புகள் பற்றி, கவனத்தைக் கவர்கின்றன.

சின், தம் முதல் தனிக் கண்காட்சியை நடத்திய பெய்ஜிங்கின் 798வது கலை மாவட்டம், தைப்பே சர்வதேச ஓவியர்கள் கிராமம், மணிலாவின் மெட்ரோபாலிடன் அருங்காட்சியகம் உள்ளிட்ட அயலக, உள்நாட்டுக் கண்காட்சிகளில் பங்கேற்றவர். ஓ!ஓபன் ஹவுஸ் என்ற உள்ளூர் கலை அமைப்பின் நான்கு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றிருக்கிறார்.

**ஃபையரூல் தர்மா**
**அலீஜன், berukera, billyX, ஜசீம், லீ கீ சான், லே லஹூர், and rawanXberdenyut ஆகியவற்றைக் காட்சிப்படுத்தும் முழுமையான வெளியீடு**
**2023**
பிளக்சிகிளாஸ் (புலி), பாலியூரித்தீன் பூச்சு, ஆவண மசி, பிவிசி மற்றும் பாலி அக்ரிலேட் பசைகள்
மீட்கப்பட்டு, ஓவியர்களுக்கான வினைல்,(ஆரகல் 651, ரி-ஜெட்-மோனோ) முலாம் பூசப்பட்ட
அலுமினனியக் கலவை மீது கரியமில  இழை, பிவிசி, பாலிஅக்ரிலேட் பசைகள், பின்காலத்திய,
பிரதிபலிக்கும் பிவிசி (கிரிப் –ஆன்) நுண்பிரிசம்கள் கொண்ட பிசின் மிகு உலோகமற்ற பிரதிபலிப்பு
நாடா(ஸ்டீவ் & லீஃப்ட்) பாலிபுரபொலின் படலம் (ஹன்டர்) சைலீன் கொண்டபிளக்சிகிளாஸ், சிலிகான்
6061 அலுமினியம் கலவை கொண்ட துணைநிலை தாங்கியே, ஒலி, 2 நிமி 51 நொடி
சிங்கப்பூர் கலை அருங்காட்சியக ஆணையின் பேரில் உருவானது

அன்றாட வாழ்வு, இணையம், ஆவணக் காப்பகம் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட, கலாசாரதிலும் தொழில் உலகிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலை வேலைப்பாடுகள், வடிவங்கள் கொண்ட காட்சிப்பொருட்கள் ஆகியவற்றை, மீள்கலவை செய்யும் ஒரு முயற்சியே, முழுமையான வெளியீடு. அதே பொருட்களைக்கொண்டு படைக்குமாறு,  ஓவியர் குழுவை ஃபயரூல் தர்மா அழைத்தார்.அவர்கள் இணைந்து அந்தப் பொருட்களைக் கொண்டு பரிசோதனை முயற்சியாக, ஒவ்வொருவரும், தத்தம் முறையில், முறிந்த துண்டுகளைப் பிரித்தெடுத்து வடிவங்களின் அவரவர் விளக்கத்தைப் படைத்தனர். அவர்கள்  கூட்டு முயற்சியால், தடுமாற்றம், திரும்ப திரும்பச் செய்தல் ஆகியவை, , பண்பாட்டையும், வாழ்வையும் சுருக்குதல் என்பதிலிருந்து பெறப்பட்ட ஒரு புதிய காட்சித் தொகுப்பு உருவாயிற்று.

சம்பிரதாயமாகச் சொல்வதானால், இந்தப் படைப்பு எல் இ டி தகடுகளைத் தொகுக்கும் முறையை ஒத்திருக்கிறது.

கிரிட் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, மின்னிலக்க அமைப்புகள், விநியோகம் ஆகியவற்றை பிணைத்த ஓர் அமைப்பாக உருவாக்குவதைக் குறிக்கிறது. நிலையான இந்தச் சட்டகங்களுக்குள் மின்னிலக்க, இயல்பு வகை,  ஆகியவற்றிற்கு  இடையே உள்ள முரண்பாடுகளை, காட்சி, மீளக்கலக்கவும் பிறழவும் செய்கிறது.

இந்தப் படைப்பின் தலைப்பு, பொருளாதாரத்தில் உற்பத்தித் திறன் அளவைக் குறிக்கிறது. தனிநபர் பங்களிப்பைக் குறிப்பிடாமல் ஒட்டுமொத்த உழைப்பின் வெளியீட்டைக் குறிக்கிறது. மொத்த வெளியீடு, ஓவியரின்,  திரட்டப்பட்ட ஒட்டுமொத்தப் படைப்பாற்றலைக் குறிக்கிறது. அதே நேரம் இந்தப் படைப்பினுள் முதலீடு செய்யப்பட்ட, இடையறா மனித உழைப்பையும் முன்நிறுத்துகிறது.

அக்டோபர் 23 2009 வரை காணத்தக்க பிராஸ் பாசா சாலையில்,  சிங்கப்பூர் கலை அருங்காட்சியக விளம்பரப் பலகையில் அலீஜன், லே லஹூர், மண்ணி வாங், திரு.ஜாலீ, rawanXberdenyut, தவ்வீக் ரஹ்மான், ஆகியோரைச் சித்தரிக்கும் L4NDf33lzz ஐ ஓவியர் படைக்-கிறார். அந்தக் குறிப்பிட்ட இடத்திற்கும், அவர் குறிப்பிடும்  அந்த வடிவங்களின் மூலப் படைப்பாளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் விதமாக, ஃபையரூல், ஆவணக் காப்பகங்களிலிருந்து முன் மாதிரிகளைப் பெற  மேற்கொண்ட தம் அணுகுமுறையையும்  பதிவு செய்கிறார் .

**கலைஞரைப் பற்றி**

பொதுமக்களிடையே நிலவும் கலாசாரம், ஆவணக் காப்பக ஆவணங்கள், இலக்கியக் குறிப்புகள், இணையம், தம் சொந்த வாழ்வனுபவங்கள் ஆகியவற்றிலிருந்து ஃபையரூல்  ஊக்கம் பெறுகிறார். தமது படைப்புகளில் பல்வேறு விதப் பண்டங்கள், பொருட்கள், புகைப்படக்கலை, சிற்பம், மின்னிலக்க  ஊடகம் என்பனவற்றைக் கொண்டு தீவிரமாகப் பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்கிறார்.

வாழும் சித்திரங்கள்: தென்கிழக்காசியாவில் புகைப்படக்கலை சிங்கப்பூர் தேசிய கலைக்கூடம் (2022-2023), ஆஃப்ரோ – தென்கிழக்காசியத் திட்டம், ஆசியான் பூசான் (2022) பிலிப்பைன்ஸின் வர்காஸ் அருங்காட்சியகம் (2022) சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின், ஓவியம், வடிவமைப்பு, ஊடகக் கூடம் (2021) *மேற்குலகம் தூங்கியபோது*, உலக வர்த்தகமையம், நியூயார்க் (2019) பெர்ஃப்போமா 2019ன் ஒரு பகுதியாக, *கண்ணாடிகளின் வரைபடம்* சிங்கப்பூர் ஈராண்டு காட்சி 2016 உள்ளிட்ட, குறிப்பிடத்தக்க குழுக்கள், காட்சிகளில் இடம் பெற்றுள்ளன. 2019-2020ல் நா.தொ. ப வின் சமகால ஓவியங்களுக்கான மையத்தில் ஃபைரூல் உறைவிடக் கலைஞராக இருந்திருக்கிறார்.

**பிரியா கீதா தியா**
***பிரியகீதா தியாஒப்பாரி H.E.A.T***
**2023**
இருபுறம் குவிந்த ஆடிப் பதிவுகள், ரப்பர் மரத்துண்டு, ரப்பர் பால், ரப்பர் தரை, காணொலி
காணொலி: ஒற்றைச் சானல் 16:9 வடிவமைப்பு
வண்ணம் ஒலி (ஸ்டீரியோ) 14 நிமி 15 நொடி

ரப்பரின் முக்கியத்துவத்தை, ரப்பர் மரத் துண்டு, ரப்பர் பால் ஆகியவற்றைக் காட்சிப்படுத்துவதை முதன்மையாகக் கொண்ட பல்லூடக அமைப்பு, ஒப்பாரி H.E.A.T. துணை மரத்துண்டு என அறியப்படும் ரப்பர் மரத்துண்டு, ரப்பர் மரத்திலிருந்து (hevea brasiliensis) கிடைக்கிறது. அமைப்பின் வெளிப்புற வடிவங்கள், அரைச்சுற்று பால் எடுக்கும் முறையில், (herring-bone method) ரப்பர் மரங்களில் செதுக்கப்பட்ட அடையாளங்களை, நகல் எடுக்கின்றன. பல தொழில்களில் அவை பெரிதும் பயன்படுத்தப்பட்டன. 19ஆம் நூற்றாண்டு பிரிட்டிஷ் ஆட்சியில் பிரிட்டிஷ் மலேயா (இன்றைய சிங்கப்பூர், மலேசியா) நெடுகிலும், ரப்பர் தோட்டங்கள் அமைக்க, அது வழிகோலிற்று.

ஒப்பாரி H.E.A.T நிறுவப்பட்ட, சுற்றிலும் தடுப்புகள் அமைந்த அறைக்குள் நுழையும்போது, ரப்பரின் மென்மையும், தொட்டுணரக் கூடிய தன்மையும், பார்வையாளரை அறைக்குள் வரவழைக்கும். கூடுவதற்கும், சிந்திப்பதற்கும் ஏதுவாக, உள்ளறை செயற்கை நுண்ணறிவில், சோதனை முறையில் உருவான ஒப்பாரி, நாட்டார் இசைத் தாளக்கட்டு ஆகியவை, இடம் பெறுகின்றன. ஒப்பாரி என்பது தென்னிந்தியாவிலிருந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாகக் கொண்டுவரப் பட்ட பெண்கள், தங்கள் சொந்தங்களை கௌரவிக்கும் வகையிலும், தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தவும் பாடும் துயரப்பாடல். ஒப்பாரி H.E.A.Tல் செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட ஒப்பாரி, மனிதரற்ற உலகிற்கு ஒரு பாலம் அமைக்க முயலும் அதே நேரம், ஒப்பந்தக் கூலிகளை கௌரவிக்கிறது. அவர்கள் மீதான ஒடுக்குமுறையையும் மறக்கக் கூடாது.

தொடர்ந்து நடைபெற்று வரும் ஆய்வுத் திட்டமான ஒப்பாரி H.E.A.T இந்தக் கேள்விகளை எழுப்புகிறது: மலேயாவின் காலனித்துவத்தில் நிகழந்த கொடுமைகள் குறித்த நினைவுகள், தொழிநுட்பத்தின் வழி எழுப்பப்படும் சடங்குகளைக், கேட்பதன் மூலம் சமரசம் செய்துகொள்ள முடியுமா? அந்த சமரசத்திற்கான சிறந்த இடமாக, அருங்காட்சியகம் அளிக்கும் சமகாலக் கலைப்படைப்பு அமையுமா?

**ஒவ்வாமை எச்சரிக்கை:**
**இந்தக் கலைப்படைப்பில் ரப்பர் பால், ரப்பர் மரத்தால் உருவான பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன**

இந்த அமைப்பினுள் நுழையும் முன்னர், தயவு செய்து உங்கள் காலணிகளைக் கழற்றி விடுங்கள். நகர்தலுக்கு உதவும் இயந்திரப் பிரயாணச்சாதனங்களைப் பயன்படுத்தும் விருந்தினர்கள், காலணிகளைக் கழற்றாமல் நுழையலாம்.

**கலைஞரைப் பற்றி**

பிரியகீதா தியா காலம் சார்ந்த ஊடகங்கள், கருவிகல அமைப்பு ஆகியவை கொண்டு படைப்பவர். எதிர்ப்புர்ணவு வெளிப்படும் களங்கள் என அவர் கருதும் தென்கிழக்காசிய மலைப்புறத் தோட்டங்களைப் பற்றிய ஊக விவரிப்பை, அவர் கலைப்படைப்புகள் அளிக்கின்றன. மின்னிலக்க குறியீட்டியல் வழி, தொடர்பற்ற விரிவுரைகளைக் கட்டுவது, புலம்பெயரும் வரலாறுகள், மனிதர் அற்றவற்றோடு நம் உற வுகள் ஆகியன குறித்த ஆய்வுகளில் ஆர்வம் கொண்டவர். கொச்சி –முஸிரிஸ் ஈராண்டு காட்சி, கேரளா (2022-2023) லா டிரோப் கலைக் கழகம், ஆஸ்திரேலியா(2022), சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடம் (2020) கலை-அறிவியல் அருங்காட்சியகம் சிங்கப்பூர் (2019) ஆகிய இடங்களில் இவரின் அண்மைக்கால கண்காட்சிகள் நடைபெற்றன. 2019ல் ஆர்ட் அவுட்ரீச் இம்பார்ட் விருதைப் பெற்றவர். தேசிய தொழில்நுட்பக் கல்லூரியின் சமகால சிங்கப்பூர் ஓவிய மையத்தில் 2022ல் உறைவிடக் கலைஞராக இருந்திருக்கிறார். 2023ஆம் ஆண்டு ஏப்ரல் முதல், ஜூலை வரை, நெதர்லாந்து ஜான் வான் ஈயிசிக் அகாதெமியின் கடல்-வான் ஓவியக் கூட உறைவிடக் கலைஞராகச் செயல்படத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

**கைரூல்தீன் வகாப்**
***நிலப்பரப்பு அழிப்பான்***
**2023**
தார்ப்பாயில் அக்ரிலிக்கால் வரையப்பட்டது
சிங்கப்பூர் கலை அருங்காட்சியகப் பொறுப்பாணை பேரில் உருவானது

நீரும் மண்ணுமாக இருந்த நிலப்பரப்பு, ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டதாக உருவாக்கப்பட்டதால், நிலத்துடன் இருந்த நம் உறவில் ஏற்பட்ட வரலாற்று மாற்றங்களை, நிலப்பரப்பு அழிப்பான் சுட்டிக்காட்டுகிறது. அடுக்குகளாய்த் தொங்கவிடப்பட்ட இந்த ஓவியங்கள் மூலம், இந்தப் படைப்பு, நம் நிலம், முழுமையான, ஒன்றுபட்ட, நிலையான மண்தானா என்ற கேள்வியைக் கேட்கிறது.

நிலப்பரப்பின் பின்னணிகள், இந்த ஓவியங்களின் மையம். நிலத்தின் மீது தார்ப்பாயை விரித்து ஓவியர் வண்ண அடுக்குகளை உருவாக்குகிறார். காலப்போக்கில் வண்ணங்கள் காய்ந்ததும், வண்டல் படிவங்கள் உருவாகின்றன. நில அமைப்பின் தடயங்களை விட்டுச் செல்கின்றன. அவை ஓவியரின் கைவண்ணத்தைத் தெரிவிக்கின்றன. இந்த அணுகுமுறையின் மூலம், இந்தப் படைப்பு, எழுத்து, கூட்டுப்படைப்பு ஆகிய செயல்பாடுகள் நிலப்பரப்பைப் புரிந்துகொள்வதை முன்மொழிகின்றன.

### கலைஞரைப் பற்றி

கைரூல்தீன் வஹாபின் ஓவியங்கள் சிங்கப்பூர், தென்கிழக்காசியா ஆகியவற்றிலுள்ள பிந்திய காலனித்துவ, சூழல் வரலாறு, பண்பாட்டுப் புவியியல் எனவிவரக் கூற்றை   பின்னுபவை. பழைய ஆவணங்கள், கிடைக்கப்பெற்ற படங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு, கைரூல்தீன் உருவாக்கும் காட்சிகள், நாம் இயற்கை உலகுடன் எதிர்கொண்ட வரலாற்று அரசியல் மோதல்களுடன் ஒத்திருக்கின்றன.

2014 ஆம் ஆண்டு லாசெல் ஓவியக் கல்லூரியில் நுண்கலையில் இளங்கலைப் பட்டம் பெற்றார். கட்யூரி காட்சிக்கூடத்தில் இரண்டு தனிக் கண்காட்சிகள், நிலத்தின் வடிவம் (2023) உலகைக் குறிக்கும்  சொல் காடு (2021) ஜோக்ஜா XV-ஈக்வேடர்5 (2019) நகர்வின் நிலை: செர்ஜா கூ(2018) உட்பட பல உள்நாட்டு, அயல்நாட்டுக் கண்காட்சிகளில் தன் படைப்புக்களைக் காட்சிப்படுத்தியவர். 2021ல் தேசிய நூலகப் படைப்பாற்றல் உறைவிடம், 2018ஆம் ஆண்டின் சிறந்த UOB ஓவியப் பரிசுகள் பெற்றவர்.

**மோசஸ் தான்**
***ஓர் எச்சரிக்கை, ஒரு நடனக் கோவை***
**2023**
பாலிமர் களிமண், புட்டா மா பூசப்பட்ட மென் உருக்கு,  காகிதத்தில் அச்சிடப்பட்ட புகைப்படங்கள், ஓவியங்கள், காணொலி, கண்டெடுத்த பொருட்கள், சிங்கப்பூர் கலை அருங்காட்சியக பொறுப்பாணையின் பேரில் உருவாக்கப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், அறைக்கலன்கள், அச்சிட்ட புகைப்படங்கள், ஓவியங்கள், காணொலி, தாவரங்கள், விலங்குகள் போலச்  செய்யப்பட்ட பாலிமர் களிமண் வடிவங்கள் கொண்டது, ஓர் எச்சரிக்கை ஒரு நடனக் கோவை. இவை எல்லாம் ஒருங்கிணைந்து, தொகுப்பான வடிவமைப்பை நினைவுபடுத்துகிறது.

மோசஸ் டான், இந்தக் கலைப்படைப்பில், பல அர்த்தங்கள் கொண்ட சொற்களையும், கருத்துக்களையும் விந்தை, (queerness) தோல்வியும் பாதிப்பும்,(failure and affect)  எச்சரிக்கை,(“caveat”) அலைகள் (tidalectics.) உள்ளிட்டவற்றிற்கு ஒப்புவமையாக்கி, நீர்போல் பாய்ந்தோடும் தன்மை கருத்தியல்களை  ஆராய்கிறார். எச்சரிக்கை என்றால், தவறான விளக்கமளிப்பதைத் தடுக்க, விரிவாக அளிக்கப்படும் கவனமான விளக்கம். விந்தை மனிதர்கள் அன்பற்ற சூழலில் தங்கள் அடையாளங்களை வெளிப்படுத்திக் கொண்டும், பார்வையில்படும்படி  செல்லும் போது, எதிர்கொள்ளும் சவால்களை, அந்தச்சொல் குறியீடாகிறது. அலைகள் என்பது, கடல்போல் விரிந்த உலகப் பார்வையையும்; அசைவுகள், நீர்போல் பாய்ந்தோடும் தன்மையால், வரையறுக்கப்படும் புதிய முறைகள், வழிகள், ஆகியவற்றையும் உணர்த்துகிறது. நடன நிகழ்ச்சியைப் போன்ற சைகைகளைப் படைப்பதன் வழி, அலைகளின் உயர்வையும் சுருளுதலையும் மனிதர்களுக்கான நடனமாக்குகிறார். அவை, தற்காப்பிற்காக, உள்நோக்கிச் சுருள்தல் அல்லது அக்கறையின் சைகைகளாக, மனந்திறந்து கொள்வது போன்ற உணர்வுரீதி எதிர்வினைகளை எழுப்புகின்றன. இந்த அசைவுகளும் வடிவங்களும் காணொலியில் நடனமாடுபவர்கள் வழியேயும், இந்தப் படைப்பின் மற்ற அம்சங்களான வினைல் கிராஃபிக்ஸ், பாலிமர் சிற்பங்கள் ஆகியவற்றின் மூலமும் ஆராயப்படுகிறது.

பல அடுக்குகளும் உள்ளார்ந்த எள்ளலும் கொண்ட ஓர் எச்சரிக்கை *ஒரு நடனக் கோவை*, ஒழுங்கற்ற குறிப்புகள், குறியீடுகள் வழியே அடையாளச் சிக்கல், விந்தைத் தன்மை ஆகியவற்றை ஆராயப், பார்வையாளர்களை அழைக்கிறது.

### கலைஞரைப் பற்றி

மோசஸ் டான், சிங்கப்பூரில் வசிக்கும் ஓவியர். விந்தை மனிதர்களைப் பற்றிய கருத்தியல்களையும் அரசியலையும் ஊடறுக்கும் வரலாறுகளை ஆராயும் அவரின் படைப்புக்கள், மனச்சோர்வு, , அவமானம் விலகலுக்கான புள்ளிகளாகக் காண்கின்றன. சிற்பங்கள், கண்டெடுக்கப்பட பொருள்கள், ஓவியங்கள், காணொலிகள், நிறுவல்கள் வழியே செயல்படும் இவர், நுட்பமான செய்திகள், குறியீடுகள் ஆகிய வற்றைப் பயன்படுத்துகிறார். லாசெல் ஓவியக் கல்லூரியில் நுண்கலையில் இளங்கலை (மேனிலை) பட்டமும் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் வேதியியலில் இளங்கலை (மேனிலை) பட்டமும் பெற்றவர்.

2014ஆம் ஆண்டு, ஓவியம் வடிமைப்பிற்கான நாய்ஸ் (இரைச்சல்) சிங்கப்பூர் பரிசு, 2016ல் வின்ஸ்டன் ஓ! பயண மானியம், 2016ல்  கல்வியில் உன்னத நிலைக்கான லாசெல் விருது ஆகிய விருதுகள் பெற்றவர். அவர்  படைப்புகள் சிங்கப்பூரின் யாவூஸ் ஓவியக்கூடம், கிரே பிராஜெக்டஸ் சிங்கப்பூர், ஹாங்காங்கின் மறைக்கப்பட்ட வெளி, வெளி 1ஏ, அமெரிக்காவின் இந்தியானா பல்கலைக்கழகம், துருக்கியின் சபான்சி பல்கலைக்கழகம், ஜெர்மனியின் Kunst im Dialog, சமகால ஆசிய ஓவியங்களுக்கான 4ஏ மையம் ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவின்சாண்டா ஃபெ கலைக்கழகத்தில் உறைவிடக் கலைஞராகவும் பணி நிறைவு செய்துள்ளார்.